**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)

**HG20 – நிலை II (Grade II)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**ஜூலை – ஆகஸ்டு2023**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. செந்தமிழின் இனிமைக்கு கூறப்படும் உவமை யாது?
2. திருக்குறளின் சிறப்பு பெயர் யாது?
3. பழமொழி உருவாக காரணமாக அமைவது எது?
4. பசி அறிந்து உணவு படைப்பவர் யார்?
5. 'கா' என்பதன் பொருள் யாது?
6. கலிங்கத்துப்பரணியைப் பாடியவர் யார்?
7. அன்னை அபிராமி குடிகொண்ட ஊர் எது?
8. இல்லை என்னாது கொடுப்பவர் யார்?
9. குறுக்கம் எத்தனை வகைப்படும்?
10. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

**பகுதி –ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. இறைவன் எவ்வாறு விளங்குகிறான்?
2. கண்ணதாசன் இயற்றிய நூல்கள் சிலவற்றை கூறுக.
3. அறிவு, அறனாவது எவ்வாறு?
4. குடிப்பிறப்பாளரின் சிறப்பு யாது?
5. இராமனுக்கு உணவாக குகன் கொண்டு வந்தவை யாவை?
6. இரண்டாம் குலோத்துங்கன் தில்லை கோவிலுக்கு என்ன செய்தான்?
7. சிவன் அசுரர்களின் என்னென்ன கோட்டைகளை அழித்தான்?
8. பரணி யார் மீது பாடப்பெறும்?
9. இறைவன் எவ்வாறெல்லாம் காட்சி தருகிறான்?
10. ஔகாரக் குறுக்கம் என்றால் என்ன?
11. வியங்கோள் வினைமுற்று எந்தெந்தப் பொருளில் வரும்?

12. எச்சம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. தானியாகு பெயரை உதாரணத்துடன் விளக்குக
14. உயிரீற்றுப் புணர்ச்சி என்றால் என்ன?
15. மூவகை மொழிகள் யாவை?

**பகுதி – இ**

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. உலக வாழ்த்து பாடல் வழியாக கண்ணதாசன் கூறும் சிறந்த கருத்துக்களை எழுதுக .
2. மேன் மக்களின் தன்மையினை நாலடியார் வழி நின்று விளக்குக.
3. பாம்பறியும் பாம்பின் கால்– பழமொழி வழி விளக்குக.
4. நிரல்நிறை அணியை உதாரணத்துடன் விளக்குக .
5. ஐவகை நிலங்களுக்குரிய பெரும்பொழுது , சிறுபொழுது ஆகியவற்றை அட்டவணை இட்டு எழுதுக
6. எது இன்பம் என்று கவிஞர் சுரதாவின் பாடல் வழி விளக்குக .
7. கவிஞர் அமுத பாரதியின் கவிதை ஒன்றினை எழுதி , ஆசிரியர் குறிப்பு தருக
8. தாலாட்டு பாடல் வழியே தாய் தான் கொண்டு வந்த சீதனமாக கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக .

**பகுதி –ஈ**

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u>விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. வழு, வழாநிலை, வழு அமைதி உதாரணம் தந்து விளக்குக.
2. வினா வகைகளை விளக்கி உதாரணம் தருக.
3. சித்தன்னவாசல் இயற்கை ஓவியங்கள் குறித்தும் அதில் இடம்பெற்றுள்ள வண்ணக் கலவையின் சிறப்பு குறித்தும் தொகுத்து எழுதுக.

**பகுதி –உ**

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. வள்ளல் பாரியின் ஆட்சி சிறப்பைப் பற்றியும் பறம்பு மலையின் இயற்கை வளத்தைப் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
2. ஆகுபெயரின் வகைகளை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

*****